அரசு கவின் கலைக் கல்லூரி,
கும்பகோணம் 612 002.

குறிப்பாணை எண்:429/அ3/2020 நாள்:24-10-2020

பொருள் : அரசு கவின் கலைக் கல்லூரி, கும்பகோணம் - 2020-2021 ஆம் கல்வியாண்டு – இளங்கவின்கலை பட்டப்படிப்பு முதலாம் ஆண்டு மாணவர் சேர்க்கை - நாட்டத் தேர்வுக்கு அழைத்தல் - தேர்வு விதிமுறைகளைத் தெரிவித்தல் - தொடர்பாக.

பார்வை: தங்களின் இளங்கவின்கலைப் பட்டப்படிப்பு சேர்க்கைக்கான விண்ணப்பம்.

-----------

பார்வையில் காணும் விண்ணப்பத்தில் அளித்துள்ள விவரங்களின் அடிப்படையில் கும்பகோணம், அரசு கவின் கலைக் கல்லூரியில் 2020-2021 ஆம் கல்வி ஆண்டு இளங்கவின்கலை பட்டப்படிப்பின் முதலாமாண்டில் பல்வேறு துறைகளுக்கு மாணவர் சேர்க்கைக்காக நடத்தப்பெறும் நாட்டத் தேர்வுக்கு (Aptitude Test) நேரில் வருமாறு அறிவுறுத்தப்படுகிறது.

**<u>நாட்டத் தேர்வு விவரங்கள்</u>**

| செய்முறைத் தேர்வு | நாள் மற்றும் நேரம் | பாடம் |
|---|---|---|
| புனையா ஓவியம் Drawing | 5-11-2020<br>வியாழக்கிழமை<br>காலை 11.00 மணி முதல் 01.30 மணி வரை | மாதிரியை கொடுக்கப்படுகிற தாளில் பொருத்தமான அளவிற்கு ஒளி மற்றும் நிழலுடன் ( Light and Shade ) பென்சிலால் வரைதல்<br>( 6B/8B/10B Pencil ) |

- விண்ணப்பதாரர்கள் காலை 10.00 மணி முதல் 11.00 வரை தேர்வு மையத்திற்குள் அனுமதிக்கப்படுவர்.
- செய்முறைத் தேர்விற்கான தேர்ச்சி மதிப்பெண் 35% விழுக்காடு.
- கோவிட்-19 சூழலை கருத்தில் கொண்டு செய்முறைத் தேர்வு மதிப்பெண் 200 ( 80% ) க்கும் பனிரெண்டாம் வகுப்பில் பெறப்பட்ட மதிப்பெண் 50 (20%) க்கும் கணக்கிடப்பட்டு மொத்த மதிப்பெண்கள் 250 (100%) என்ற அடிப்படையில் தர வரிசைப் பட்டியல் வெளியிடப்படும்.
- தேர்வு எழுத அழைக்கப்பட்டதாலேயே தங்களுக்கான சேர்க்கை உறுதி என கருதக்கூடாது.

தேர்வு நடக்கும் இடம்:

நாட்டத் தேர்விற்கு வரும்போது கீழ்கண்ட பொருட்களை தவறாமல் எடுத்து வரவேண்டும், விடைத்தாள்கள் மட்டும் கல்லூரியிலிருந்து வழங்கப்படும்.

1 தங்களால் பதிவிறக்கம் செய்யப்பட்ட அனுமதிக் கடிதத்துடன் நுழைவுச் சீட்டினையும் (Hall Ticket ) எடுத்து வர வேண்டும்.
2 ஒளிப்படத்துடன் கூடிய அடையாள அட்டை ஏதேனும் ஒன்றை எடுத்துவர வேண்டும். உதாரணமாக ஆதார் அட்டை (Aadhar Card), வாக்காளர் அடையாள அட்டை(Voter ID), கடவுச்சீட்டு (Passport), ஓட்டுநர் உரிமம் (Driving Licence), பான் கார்டு (Pan Card)
3 விண்ணப்ப கட்டணம் கட்டியதற்கான அத்தாட்சி ( Bank Challan/DD)
4 6B/8B/10B Pencil, Blue Pen, Board clips, Eraser
5 Drawing Board 18inch x 24inch, News papers 10sheets

1. தேர்வுக்கு வரும் விண்ணப்பதாரர்கள் போக்குவரத்து, உணவு மற்றும் உறைவிட வசதியினை அவர்களே செய்து கொள்ள வேண்டும்.

2.செல்லிட பேசி, மடிக்கணினி மற்றும் மின்னணு சாதனங்கள் தொடர்புடைய எதுவும் தேர்வு வளாகத்தில் கண்டிப்பாக அனுமதி இல்லை. மீறினால் விண்ணப்பதாரர் தேர்வு மையத்திலிருந்து வெளியேற்றப்பட்டு தகுதி நீக்கம் செய்யப்படுவர்.

3.விண்ணப்பதாரர் உடன் வருபவர்கள் தேர்வு வளாகத்தினுள் கண்டிப்பாக அனுமதிக்கப்பட மாட்டார்கள். விண்ணப்பதாரர்களின் பெற்றோர்கள் மற்றும் உடன் வருபவர்கள் சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்கும் விதமாக தேர்வு வளாகத்திற்கு வெளியே கூட்டமாக நிற்பதைத் தவிர்த்து தேர்வு தொடங்கும் நேரம் மற்றும் தேர்வு முடியும் நேரங்களில் மட்டுமே நேரில் வந்திருந்து தங்களது மகள்/மகனை அழைத்துச் செல்லக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

4.மேலும் விண்ணப்பதாரர்கள் மற்றும் உடன் வருவோர்களின் வாகனங்களை தேர்வு வளாகத்திற்குள் நிறுத்த அனுமதி இல்லை.

5.தேர்வு மையத்திற்குள் விண்ணப்பதாரர்கள் சமூக இடைவெளியை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும். COVID-19 விதிமுறைகளை தவறாமல் பின்பற்ற வேண்டும்

6. விண்ணப்பதாரர்கள் கண்டிப்பாக முகக் கவசம் அணிந்து வரவேண்டும். முகக் கவசம் அணியாதவர்கள் தேர்வு எழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள்

7.இருமல், காய்ச்சல் மற்றும் தொற்று அறிகுறி உள்ளவர்கள் தேர்வு எழுத வரும்போது கண்டிப்பாக தேர்வு கண்காணிப்பாளரிடம் தகவல் தெரிவிக்க வேண்டும் அவ்விண்ணப்பதாரர்கள் தனியே தேர்வு எழுத அனுமதிக்கப்படுவார்கள்.

8.விண்ணப்பதாரர்கள் சுகாதார நலன் கருதி தங்களுக்குரிய குடி தண்ணீர் பாட்டில்களை தாங்களே தனியாக கொண்டு வந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

9.தேர்வர்களின் தரவரிசைப் பட்டியல் தேர்விற்கு மறுநாள் 06-11-2020 அன்று மாலை பகிரி மூலமாக வெளியிடப்படும்.

10. தெரிவுக்குழுவின் முடிவே இறுதியானது.

முதல்வர்(பொ)
அரசு கவின்கலைக்கல்லூரி
கும்பகோணம்

.

101 முதல் 258 வரை
அரசு கவின் கலைக்கல்லூரி,
சுவாமிமலை முதன்மைச்சாலை,
கொட்டையூர்,
கும்பகோணம்-612 002.
0435-2481371 , 8754572315

301 முதல் 331 வரை
அரசு கவின் கலைக்கல்லூரி,
31,ஈ.வெ.ரா பெரியார் சாலை
பெரியமேடு,
சென்னை-600 003.
044-25610878 , 9443524220

401 முதல் 463 வரை
மண்டல கலை பண்பாட்டு மையம்
பாரதி உலா, முதல் தெரு
தல்லாகுளம் (அஞ்சல்)
மதுரை - 625002
0452 2566420- 9600009066

501 முதல் 547 வரை
மண்டல கலை பண்பாட்டு மையம்
அரசு இசைப்பள்ளி
ஆவின் பால் பண்ணை எதிரில்
தளவாய்ப்பட்டி
சேலம் -636302
0427 2386197- 9486339009